நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.5, திருநெல்வேலி.

**முன்னிலை: திரு. S. பாக்கியராஜ்., பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.5 (மு.கூ.பொ), திருநெல்வேலி.**

2025–வது வருடம், பிப்ரவரி மாதம், 07 ம் நாள் வெள்ளிக்கிழமை

**திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம், தை திங்கள் 25–ம் நாள்**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். **366 / 2023**

(**CNR No.**TNTL – 04 – 034459 – 2022)

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
முன்னீர்பள்ளம் காவல் நிலையம்,
திருநெல்வேலி மாநகரம்.
குற்ற எண்.505 / 2021 ---- குற்றமுறையீட்டாளர்

–எதிராக –

1. ராமசாமி (வயது 28/24)
   த/பெ. ஆறுமுகதேவர்
   பெருமாள் கோவில் சன்னதி தெரு,
   கோபாலசமுத்திரம்.
2. வெள்ளையம்மாள் (வயது 48/24)
   க/பெ. ஆறுமுகதேவர்
   பெருமாள் கோவில் சன்னதி தெரு,
   கோபாலசமுத்திரம். ---- எதிரிகள்

இவ்வழக்கு 23.02.2023–ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இன்று 07.02.2025–ம் தேதி இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பாக வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை 2 திரு.மைக்கேல் ஜெரால்டு., அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் தனக்கு தானே முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இறுதியாக இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

1) அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 08.12.2021ம் தேதியன்று இரவு 07.00 மணியளவில் சாட்சி 1 சண்முகவேல் அவரது வீட்டு காம்பவுண்டுக்குள் முன்பக்க கேட் அருகில் சாட்சி 1 ராஜா மற்றும் சாட்றி 3 இசக்கி செல்வம் ஆகியோர்களுடன் நின்று பேசி கொண்டிருந்த போது அங்கு வந்த எதிரிகள் சாட்சியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து சாட்சி 1ஐ பார்த்து தேவடியா மவனே செருக்கியுள்ள ஒழுங்கா எங்க மேல கொடுத்த கேஸை வாபஸ் வாங்குல இல்லையெனா உன்ன கண்ட துண்டமாக வெட்டி கொன்றுவிடுவோம்ல என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளதால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 447, 294(b), 506(1)–ன் கீழ் முன்னீர்பள்ளம் காவல் உதவி ஆய்வாளர் இந்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 447, 294(b), 506(1)–ன் கீழ் வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கி, எதிரிகளிடம் இதச பிரிவுகள் 447, 294(b), 506(2)–ன் படியான குற்ற சங்கதிகள் பற்றி வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்தார்கள். ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளதாக முதல் நோக்கில் தெரிந்தமையால் எதிரிகளின் மீதான இதச பிரிவுகள் 447, 294(b), 506(2)ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூறி வினவப்பட்ட போது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்து விசாரணை செய்யப்பட வேண்டுமென வேண்டினார்கள்.

3) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு:</u>**

**4(1)** அ.சா.1 சண்முகவேல் தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும் என்றும் சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு 07.00 மணியளவில் தனது வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்தபோது சில நபர்கள் கூட்டமாக ஓடி வந்து தன்னை கீழே தள்ளிவிட்டு சென்றுவிட்டார்கள் என்றும், தனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும் இது சம்பந்தமாக காவல் நிலையம் சென்றிருந்த போது போலிசார் எழுதாத வெற்று பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தனக்கு தெரியாது. மேற்படி புகார் மனுவில் உள்ள கையொப்பம் அசாஆ–1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4(2) அசா.2 ராஜா மற்றும் அ.சா.3 இசக்கிசெல்வம் ஆகியோர்கள் தங்கள் சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியாது என்றும், வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

4(3) அ.சா.4 உதவி ஆய்வாளர் முருகன் தனது சாட்சியத்தில் கடந்த 09.12.2021ம் தேதியன்று 17.00 மணிக்கு முன்னீர்பள்ளம் முதல்நிலை காவலர் செந்தில்குமார் நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 சண்முகவேல் என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கை உதவி ஆய்வாளர் வேல்முருகன் புலன் விசாரணை எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் அசாஆ–4 பார்வைமகஜர் மற்றும் அசாஆ–5 வரைபடம் தயார் செய்தும் சாட்சிகள் அனைவரையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 16.12.2021ம் தேதி முன்ஜாமீன் பெற்றுவிட்டதால் கைது நடவடிக்கை இல்லை என்றும், சாட்சிகளின் விசாரணையில்

இருந்து எதிரி ஆறுமுகதேவர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பது தெரிய வந்ததால் அவரது பெயர் நீக்கம் செய்து எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், சம்பவத்தில் ஜன்னல் கண்ணாடிகள், இரும்பு கேட், பியூஸ் கேரில் எதுவும் சேதமடையவில்லை என்பதால் 447, 294(பி), 427, 506(2) என்பதிலிருந்து 447, 294(பி), 506(1) ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததாகவும், சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும், புலன் விசாரணையில் இருந்தும் வழக்கு சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டுள்ளது உண்மை என தெரிய வந்ததால் 22.12.2021 ம் தேதியன்று எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 447, 294(பி), 506(1) ஆகியவற்றின் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**5)** அரசுத் தரப்பு சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிகளிடம் விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் சாட்சியம் என்றும், இந்த வழக்கு பற்றி வேறு ஏதாவது கூற வேண்டுமா? என்று வினவிய போது பொய் வழக்கு என்றும், எதிரிகள் பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா? என்று வினவிய போது சாட்சிகள் இல்லை என்று கூறினார். பின்பு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகள் தரப்பில் சாட்சி விசாரணை இல்லை என்று குறிப்புரை செய்ததின் பேரில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6)** இந்த வழக்கில் எதிரிகள் மீது சாட்டப்பட்ட இதச பிரிவுகள் 447, 294(பி), 506(2)–ன் படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தற்போது இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியது ஆகும்.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்கு கோப்பு பார்வையிடப்பட்டது. அரசுத்தரப்பு வழக்கறிஞர்

தனது வாதத்தில் அ.சா.4 தனது சாட்சியத்தில் முதல்நிலை காவலர் செந்தில்குமார் என்பவர் அ.சா.1 கொடுத்த புகார் மனுவினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், உதவி ஆய்வாளர் வேல்முருகன் இவ்வழக்கை புலன் விசாரணை செய்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேற்படி அ.சா.4 ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மூலம் எதிரிளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதம் புரிந்தார்.

8) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அசா.1 தனது சாட்சியத்தில் சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு 7 மணியளவில் தனது வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்த போது சிலநபர்கள் கூட்டமாக ஓடிவந்து தன்னை கீழே தள்ளிவிட்டு சென்றுவீட்டார்கள் என்றும் தனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும், காவல் நிலையத்தில் போலிசார் எழுதாத வெற்றுபேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாகிவிட்டார் என்றும், சம்பவ சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் ஆஜர் எதிரியை தெரியாது என்றும், வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகிவிட்டார்கள் என்றும், அ.சா.4 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் கொண்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதம் புரிந்தார்.

9) அரசுத்தரப்பில் புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், புகார் மனு அ.சா.ஆ–2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–3 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ–4 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ–5 ஆகவும், சட்டப்பிரிவு

மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) அரசுத்தரப்பு சாட்சிகளில் அ.சா.1 தனது சாட்சியத்தில் அசா.1 தனது சாட்சியத்தில் சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு 7 மணியளவில் தனது வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்த போது சிலநபர்கள் கூட்டமாக ஓடிவந்து தன்னை கீழே தள்ளிவிட்டு சென்றுவீட்டார்கள் என்றும் தனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும், காவல் நிலையத்தில் போலிசார் எழுதாத வெற்றுபேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாகிவிட்டார். சம்பவ சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் ஆஜர் எதிரியை தெரியாது என்றும், வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகிவிட்டார்கள். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகிவிட்டார்கள். வழக்கின் குற்ற சம்பவத்துடன் எதிரிகளை இணைவுபடுத்தி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

11) அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகிவிட்டனர் என்பதால் இதர சாட்சிகளை விசாரிப்பதால் வழக்கில் எந்த முன்னேற்றமும் ஏற்படபோவதில்லை என்பதால் இதர சாட்சிகளை நீக்கம் செய்து சாட்சி பட்டியலில் குறைவு செய்யப்பட்டனர். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.4 தனது சாட்சியத்தில் முதல்நிலை காவலர் செந்தில்குமார் என்பவர் அ.சா.1 கொடுத்த புகார் மனுவினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், உதவி ஆய்வாளர் வேல்முருகன் இவ்வழக்கை புலன் விசாரணை செய்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு சாட்சிகளில் எந்தவொரு சாட்சியும் எதிரிகள் அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாகவோ, அசிங்கமாக திட்டியதாகவோ, கொலை மிரட்டல் செய்ததாகவோ

குறிப்பிட்டு எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் விதமாக எதிரிகளை குற்றசம்பவத்துடன் இணைவுப்படுத்தி அரசு தரப்பு சாட்சிகள் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12) மேற்கண்டவாறு விவாதித்துள்ளதின் படியும், மேற்கண்ட பரிசீலனையின் படியும் எதிரியானவர் அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாகவோ, அசிங்கமாக திட்டியதாகவோ, கொலை மிரட்டல் செய்ததாகவோ 0 அரசுத்தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் கொண்டு நிரூப்பிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 447, 294(பி), 506(2)–ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூப்பிக்கப்படவில்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

13) மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளதன் படி எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 447, 294(பி), 506(2)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் கொண்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

14) முடிவாக மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்தபடி அரசுத்தரப்பு வழக்கில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(பி), 506(2)–ன் படியும் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**16)** இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அதுபற்றிய உத்தரவு இல்லை.

**17)** இந்த வழக்கு எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று சென்றுள்ளார்கள். மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைமுறி பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

**18)** இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு அல்லது மனு எதுவும் தாக்கல் செய்யப்படுமானால், மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவு அல்லது அழைப்பாணையின் பேரில் எதிரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு கு.வி.மு.ச பிரிவு 437A–ன் கீழ் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு பின்னர் தாமாகவே ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 07.02.2025–ம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S PACKIARAJ
Digitally signed by S PACKIARAJ
Date: 2025.02.07 17:09:14 +0300

நீதித்துறை நடுவர் எண். 5 (மு.கூ.பொ)
திருநெல்வேலி.

**பின்னிணைப்பு :**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :**

1. திரு. சண்முகவேல்
2. திரு. ராஜா
3. திரு. இசக்கிசெல்வம்
4. திரு. முருகன் ( உதவி ஆய்வாளர்)

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 09.12.2021 | புகார் மனுவில் உள்ள அ.சா.1 சண்முகவேல் என்பவரின் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 09.12.2021 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 09.12.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 09.12.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 09.12.2021 | வரைபடம் |

அ.சா.ஆ.6 09.12.2021 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

அ.சா.ஆ.7 09.12.2021 எதிரி நீக்கல் அறிக்கை

**3. அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை**

**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை**

S PACKIARAJ Digitally signed by S PACKIARAJ Date: 2025.02.07 17:09:18 +0300

நீதித்துறை நடுவர் எண்.5 (மு.கூ.பொ)
திருநெல்வேலி.

குறிப்பு:

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.